RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22435

OPEN ACCESS

# சிற்பியின் சர்ப்பயாகக் கவிதைப் படைப்பில் அடித்தள மக்கள் நிலை

லூ. சவரியம்மாள் [அ, *], செ. ரெஜினா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம்-625601, தமிழ்நாடு, இந்தியா.

# The Position of the Underprivileged People in Sirpi's Poetic Work 'Sarpayaakam (Sacrificial rite for the destruction of serpents)'

L. Savariammal [a, *], S. Rejina [a]

[a] Department of Tamil, Jayaraj Annapackiam College (Autonomous), Periyakulam-625601, Tamil Nadu, India.

* Corresponding Author: savaritamil@annejac.ac.in

Received: 20-05-2022
Revised: 07-09-2022
Accepted: 23-09-2022
Published: 17-10-2022

## ABSTRACT

The poet Sirpi is a boon to 20th century Tamil. In his poem, this article examines the status of the downtrodden people in society, the status of women, and the status of the people affected by politics. In the poem, Sarpayaakam, the position of the people of the lower strata of the society, the atrocities committed on the women belonging to that community, and the sufferings suffered by the people due to the political situation are also mentioned in this work. It depicts the idea that even nature silently accepts the idea that the upper classes in society think of the lower classes as contemptuous and degrading. Human society still suffers from poverty. Though there are many political programmes to eradicate poverty, poverty persists as they are not able to work. Even in the dreams of the people, there is no atmosphere of prosperity. When will their dream come true? Poverty has persisted for ages. People must be freed from these continuing clutches of poverty. The poet's desire to get rid of their hunger is expressed. Pointing out that society is deteriorating because of politics and that politics is a Snakes and Ladders game. The poet points out in his lines of poetry that many politicians are enslaving society as poisonous snakes who puff out and lunge their bodies to move on. The poet's view that the lower classes should fight unitedly and fight against the power of the upper classes to reduce their arrogance is expressed in a way that arouses the sentiments of the lower classes.

**Keywords:** Poet Sirpi, Poverty, Society, Politics, Lower Class, Sarpayaakam

## முன்னுரை

கவிஞர் சிற்பி இக்காலத் தமிழ்க் கவிதையில் முத்திரை பதித்தவர். மரபும் புதுமையும் கலந்த அருமையான கவிதைப் படைப்புகள் தந்தவர். கவிஞர் சிற்பியின் எழுத்தாற்றல் கவிதை, கட்டுரை என்னும் இரண்டு துறைகளையும் இணைக்கும் பேராறாகப் பெருகிப் பாய்கிறது. ஒரு வில்லின் இரண்டு நாண்களாக இத்திறன் திகழ்கின்றது. கவிஞர் சிற்பி இருபதாம் நூற்றாண்டுத் தமிழுக்கு வாய்த்த வரம் (Sirpi Balasubramaniam, 2014). அவரின் சர்ப்பயாகம் என்ற கவிதையில் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட சமூகமக்களின் நிலையையும், அச்சமூக பெண்களின் நிலையையும்; அரசியலால் அம்மக்கள் பாதிக்கப்படும் நிலையையும் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சர்ப்பயாகம் - அறிமுகம்

கவிஞரின் சர்ப்பயாகம் கவிதையில் சமுதாயத்தில் அடித்தள சமூக மக்கள் நிலை பற்றியும், அந்த சமூகத்தைச் சார்ந்த பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றியும், அரசியல் சூழ்நிலையால் அம்மக்கள் படும் வேதனைகள் பற்றியும் தன் கவிதைப்படைப்பில் சுட்டுகிறார். நட்சத்திரத் தொகுப்பாக விளங்கும் சர்ப்பயாகம் அவருக்கு மாபெரும் வெற்றியை ஈட்டித் தந்தது (Mohan, 2012). சிற்பியின் எழுத்துக்கள் குள்ளமானவை அல்ல என்று கூறக்கூடிய அளவிற்கு உயர்ந்த படைப்பு என்எழுத்துக்கள் என்ற அறிமுகக் கவிதையும், 31 கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. சர்ப்பயாகம்என்ற குறியீட்டுக் கவிதையும் சிகரங்கள் பொடியாகும் என்ற தலித் கவிதையும் நாய்க்குடை என்ற சூழல் காப்புக் கவிதையும் முக்கிய கவிதைகளாக இடம் பெற்றுள்ளன. இக்கவிதை வரிகள் இனிவரும் கவிஞர்களுக்கு ஒருபடிக்கட்டாய் அமைகிறது (Sirpi Balasubramaniam, 2014).

## சமுதாயம் - விளக்கம்

சமுதாயம் என்பது அரசியல், பொருளாதாரம், கலை கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், சமயம், இனம், சாதிப் பாகுபாடுகள், கொள்கைகள், ஒழுகலாறுகள் என அனைத்தையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த தொகுப்பாகும் (Pillai, 2013).

## அடித்தள சமூக மக்களின் நிலை

"சிகரங்கள் பொடியாகும்" என்ற கவிதையில் அடித்தள சமூக மக்களின் மனக் குமுறலும் அவர்களின் அழிவுக்குக் காரணமான மேல்வர்க்கத்து மக்களால் இழைக்கப்படும் கொடுமைகள் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. கவிதையைத் தொடங்கும் போதே அவலச் சூழலோடுத் தொடங்குகிறார். இதனையே கவிஞர்,

"வானம்
காயம் பட்டுக்கிடந்த விடியற் பொழுது
அருக்காணியின்
ஈட்டி மரச் சிற்பமேனி
வாய்காலில் மூழ்கிக் கிடந்தது"

அருக்காணியின் மூக்கில் வழியும் ரத்தம் உறைந்து, உதடுகள் கிழிந்து, மரணவாசலில் நின்று தனக்கு ஏற்பட்ட அவல நிலையை தன் சமூக மக்களுக்கு உரைத்தவாறே அவளின் உடல் உறைந்து கிடந்தது. மறுபக்கம் சேரிக்குடில்களின் கூரைகள் அக்கினியால் அழிந்து கொண்டு இருந்தது. அங்கு மனிதர்களும் பிஞ்சுக் குழந்தைகளும் கோரமாய் வெந்து எலும்பும் சாம்பலாய் எரிந்து கொண்டு இருந்தனர். இந்த நிகழ்ச்சி நடந்ததற்குரிய காரணத்தையும் விளக்குகிறார். இரண்டு நாட்களுக்கு முன் அருக்காணி அழுக்குத் துணியுடன் குளிக்கப் போகிறாள். அப்போது ரேடியோவில் பாடும் பாட்டை மெல்ல முணு முணுத்தபடி தான் கட்டப்போகும் சின்னான் நினைவில்; நடந்தாள். அப்போது கரையில் நடந்துபோன சென்னிமலைக் கவுண்டர் அவளைப் பார்த்து சக்கிலியக் குட்டிக்கு என்னடி கொழுப்பு… காலங்காத்தாலே குளிப்பு வேண்டியிருக்கு என்று கூறும் போது சமுதாயத்தில் சாதிக் கொடுமை தலை விரித்து ஆடுவதை கவிஞர் புலப்படுத்துகிறார் (Sirpi Balasubramaniam, 2014).

## மேல் வர்க்கத்தின் அடக்கு முறை

அனைத்தையும் கவரும் கவந்தனைப் போல் கவுண்டர் மாளிகையில் அமர்ந்து பால் பருகிக் கொண்டு காலடியில் கிடந்தது. காலடிச் சத்தம் கேட்டு குரல் கொடுத்த கவுண்டருக்கு நாங்க தான்

பதில் கொடுத்தனர். தான் செய்த தவறால் கவுண்டரின் இதயம் நடுங்கினாலும் வெளிக்காட்டாமல் நிமிர்ந்து குரல் கொடுத்தார். என்ன விசயம் என்ற கவுண்டரின். கேள்விக்கு சேரி மக்கள் எங்க அருக்காணிக்கு நேற்று நீங்க புருசனாய்ட்டீங்க அதனால் நாங்க உங்க பெண்ணைப் பெண் கேட்டு வந்திருக்கோம் என்று சொல்லி முடிக்கவில்லை அனைவரும் சுருண்டு விழுந்தனர். ஒரு நொடிப் பொழுதில் சேரியே மயான இடமாகப் போய்விட்டது. அந்த நெருப்பில் இரவு கதகதப்பாயின சூறாவளியாய் ஒரு நொடிப் பொழுதில் சுழன்று முடிந்தன. அந்தச் சேரியில் மிஞ்சி இருந்தவர்கள் சின்னானும் அவன் தலைமையில் சிலரும் இவர்களின் ஏக்கம் எப்போது தீரும் சமுதாயத்தை சீர்குலைக்கும் சாதியே நீ என்று அழிகிறாயோ? அன்று தான் அமைதி என்ற அடித்தள மக்களின் உள்ளக் குமுறலையும் மேல் வர்க்கத்தினரின் அடக்கு முறையையும் கவிஞர் சுட்டுகிறாh.;

"ஏதுடா பேச்சு ஒரு மாதிரியா இருக்கு

உதட்டுக்கு மீறின பல்லுமாதிரி…

ஏனைக் கூர்மை தீட்டிய

புளைக்கத்தியாய்ப் பாய்ந்தது

ஒரு சொல்"

என்ற கவிதை வரிகள் மேல் வர்க்கத்தினரின் ஆதிக்க முறையை வெளிப்படுத்துகிறது (Sirpi Balasubramaniam, 2014).

## இயற்கையின் மௌனம்

சமுதாயத்தில் மேல் வர்க்கத்தினர் அடித்தள மக்களை துச்சமாகவும், கேவலமாகவும் நினைக்கும் எண்ணத்தை இயற்கை கூட மௌனமிக்கிறது. என்பதை தத்துருவமாக படம் பிடித்துக் காட்டுகிறார்.

"தலை சாய்ந்தாள் அருக்காணி

கண் அயர்ந்தாள் - யாரோ

கரம்பிடிக்க விழிப்புற்றாள்

உறக்கம் கலைந்தாள்

உருக்குலைந்தாள்"

வளர்ந்து நின்ற கரும்பு வயலோடு தலை சாய்ந்து கண் அயர்ந்தவளின் கரத்தைப் பிடிக்க விழிப்புற்ற அருக்காணி தன்னையே இழந்து உருக்குழைந்து நின்றாள். புலி விழிபட்டுக் கறுப்புமான் ஒன்று கதறி வீரிட்டது போல் சென்னிமலைக் கவுண்டரால் அருக்காணி சீர்குழைந்து போனாள். சேரிப் பெண்களின் மானத்திற்கு கவுண்டர் ஒரு மயான பூமி சிறகு ஒடிந்த புறா போல் அருக்காணி சேரியை நோக்கி ஊர்ந்து சென்றாள். பொடித்த வியர்வையும் வெடித்த அழுகையும் ஆங்காரச் சிரிப்புடனும் அவள் அவலத்தை வேடிக்கைப் பார்த்த கரும்புத் தோட்டத்தை மொய்த்த குருவிகள் கூட மௌனமாய் பறந்து சென்றன (Sirpi Balasubramaniam, 2014).

## வறுமை நிலை

ஒரு கோடை நடுப்பகலில் என்ற கவிதையில் வறுமை மக்களை எவ்வாறெல்லாம் வாட்டி வதைக்கிறது என்பதை வெளிக்காட்டும் நோக்கத்தில் இக்கவிதை அமைந்துள்ளது. கோடை வெப்பத்தால் தாக்கப்பட்ட மக்கள் வாழ்கையில் பல நிலைகளிலும் பாதிக்கப்படுகிறார்கள். நிழல் தரும் மரங்கள் கூட பூமிக்கு பாரமாய் நிற்கின்றன. தார்ரோடுகள் வெப்பத்தால் கொப்புளமாய் புடைத்து மக்களை கொதிக்க

வைக்கிறது. அதுமட்டுமல்ல வறுமையும் அவர்களை ஆட்டிப் படைக்கிறது என்பதை கவிஞர் பின்வரும் கவிதை வரிகள் மூலம் விளக்குகிறார்.

“கை வண்டி கூலிக்காரன்

அலுமினிய அட்சய பாத்திரம் திறக்க

அடிவாரத்தில்

பத்தினிப் பெண்ணாய் கண்சிமிட்டும்

பழைய சோற்றுப் பருக்கைகள்

என்ற கவிதை வரிகள் சமுதாயத்தில் வறுமையின் அவலத்தை கவிஞர் சுட்டிக்காட்டுகிறார். கனவு என்ற கவிதையிலும் சமுதாயத்தின் வறுமை எடுத்துக் காட்டப்படுகிறது. பூமி தன்னைத் தான் சுழன்று புரண்டு படுக்கும் அந்த பூமிக் குழந்தையின் கனவில் நிலவை பலூனாக எண்ணி விளையாடுகிறது. நட்சத்திரங்களை மிட்டாய்களாக எண்ணி சப்புக் கொட்டுகிறது. பூமிக்குழந்தை சந்தோசத்தில் புரண்டு படுக்கிறது. ஆனால் அந்தப் பூமியின் புதல்வர்கள் ஈன்ற குழந்தைகளை வறுமை வாட்டுவதைக் கவிஞர் இக்கவிதை வரிகளில் சுட்டிக்காட்டுகிறார் (Sirpi Balasubramaniam, 2014).

இந்த

பூமியின் புதல்வர்கள்

ஈன்ற குழந்தைகள்

நித்திரை யில்லாத நெடும்பகல் கனவில்

கட்டுச்சோற்று மலைகள்

கஞ்சி நதிகள்

கார்ட்டூன்களாகச்

சப்பும் உதடுகள்

எச்சில் நாக்குகள்”

சுழன்று வரும் பூமிக்குழந்தையின் கனவில் என்ன வளமை. ஆனால், பூமியின் புதல்வர்களுக்கு கட்டுச்சோறு மலைகளாகவும் கஞ்சி நதிகளாகவும் தோன்றும் போது அவர்களின் பசியைப் போக்க முடியாத வறுமை அவர்களை வாட்டி வதைக்கிறது. வெறும் உதட்டைச் சப்பிக் கொண்டு நாக்கில் ஊறும் எச்சிலை விழுங்கிக்கொள்ளும் நிலையில் மானிட சமுதாயம் இன்றும் வறுமையில் வாடுகிறது. வறுமையை ஒழிக்க அரசியலில் பல திட்டங்கள் இருந்தும் அத்திட்டங்கள் செயல்பட முடியாமல் வறுமை நீடிக்கிறது. மக்களின் கனவுகளில் கூட வளமை சூழல் இல்லை இவர்களின் கனவு என்று நிஜமாகும் வறுமை காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தொடரும் இந்த வறுமைப் பிடியிலிருந்து மக்கள் விடுபட வேண்டும். அவர்களின் பசிக் கொடுமை நீங்க வேண்டும் என்ற கவிஞனின் ஆவல் வெளிப்படுகிறது (Sirpi Balasubramaniam, 2014).

## அடித்தள சமூக பெண்களின் நிலை

கல்வி கற்று அலுவல் செல்லும் மகளிரும் பல பிரச்சனைகளை சந்திக்கிறார்கள். மேடை போட்டு பெண் முன்னேற்றம் வேண்டும் என்று கத்துகிறவர்களும் அதைவிட்டு இறங்கியவுடன் பெண்களின் வளர்ச்சிக்கு தடையாகத்தான் இருக்கிறார்கள். இத்தகைய பெண்கள் பல இடங்களில் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அலுவலகத்தில் தன் விருப்பு வெறுப்புகளைச் சொல்ல முடியாமல் சிக்கித்தவிக்கிறார்கள். குடும்பத்தில் அவளின் வருமானத்தை அனுபவிக்க நினைக்கிறவர்கள் அவளின் உரிமைகளைப் பறித்துவிடுகிறார்கள். ஒரு விலைமகளின் கல்லறை என்ற கவிதையில்

விலை மகளின் பரிதாப நிலையை உருக்கமாக எடுத்துக்காட்டுகிறது. அவளின் கல்லறையும் கண்கலங்குகிறது. பகல் கூட அவளுக்கு இரவாய்ப் போனது. அவள் இமையில் கண்ணீரும் இதயத்தில் ரத்தமும் உறைந்து போய் விட்டது. சமுதாயத்தில் சாதாரண பெண்ணாக இருக்கும் போது அவளிடம் இருந்த வைராக்கியம் பனிப்பொடியாய் உதிர்ந்துவிட்டன. சமுதாயத்தில் பலரின் ஆசைகளையும் இச்சைகளையும் போக்க விழித்திருந்த காலங்கள் எல்லாம்இப்போது முடிந்து போய் விட்டன.

“வைகறைகள்

முடிந்தன…. எல்லாம்

இப்போது முடிந்து போய் விட்டன

இனிமேலாவது….

அவளைக்

கொஞ்சம் தூங்க விடுங்கள்”

என்று விலைமகளின் கல்லறையில் பொறித்திருக்கும் சொற்கள் சமுதாய நெஞ்சிலே நெருப்பாக உறைக்காவிட்டால் அந்தச் சமுதாயம் அடியோடு அழிந்து போகட்டும் என்று கவிஞன் தன் மனக்கு முறலை இக்கவிதையில் வெளிக்காட்டுகிறார் (Sirpi Balasubramaniam, 2014).

“ஓ சகுந்தலா” என்ற கவிதையில் சமுதாயத்தில் கீழ்வர்க்கத்துப் பெண் மேல் வர்க்கத்து ஆண்களால் காதல் வயப்படும் போது புறக்கணிக்கப்படுகிறார்கள். அன்று தேவபோகமேனகைக்கும்

மோகயாக விசுவாமித்திரருக்கும் பிறந்த மங்கை சகுந்தலை அவள் தாயாலும் தந்தையாலும் மறுக்கப்பட்டு சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட மழலையாக பூமியில் கிடந்தாள் பெண்களுக் கென்று பல உரிமைகள் கொடுக்கப்பட்ட இந்த காலத்திலும் சகுந்தலையைப் போல் பல பெண் குழந்தைகள் இன்றும் அனாதையாக குப்பைத்தொட்டிகளிலும் சந்துஓரங்களிலும் சாக்கடைகளிலும் கிடக்கிறார்கள்.

“முன்னம் விசுவாமித்ரன் கைமறிப்பு

பின்னர் துஷ்யந்தராஜன் காதல்மறுப்புக்கு

ஒரு முன்னோட்ட ஒத்திகையடி

ஒருவன்

வேதத்தைக் காதலாக்கினான்

இன்னொருவன்

காதலை வேதனையாக்குவான்”

என்ற கவிதை வரிகளில் சமுதாயத்தில் பெண்கள் ஆடவனால் தூக்கி எறியப்படும் பயனில்லாப் பொருளாகக் கருதப்படுகிறார்கள் என்பதை வெளிக்காட்டுகிறது (Sirpi Balasubramaniam, 2014).

நாடுகளுக்கிடையே நடக்கும் போரில் பிறநாட்டு உஅகதிகளாக நுழையும் பெண்களை அலங்கோலப்படுத்துகிறார்கள் ஆண்கள் அத்தகைய பெண்களின் கண்களில் கண்ணீர் இல்லை. அவள் அழுதழுது ஓய்ந்து விட்டாள் என்பதை,

“எங்களில் சிலரை…

ஒரு கவளச் சோற்றுக்கும்

ஒரு குவளைத் தேநீருக்கும்

வழியற்றுப் போன எங்களில் சிலரை

இளமை என்ற எதிரி மட்டுமே

காவலாக இருந்த எங்களில் சிலரை…”

அகதியாய் வந்த இந்த பெண்கள் ஒரு கவளச் சோற்றுக்கும் ஒரு குவளைத் தண்ணீருக்கும் அவர்களுக்கு இளமை எதிரிகளாக மாறிவிட்டது. என்று அடித்தளப் பெண்களின் பரிதாப நிலையைப் பற்றி கவிஞர் சிற்பி தன் கவிதை வரிகளில் எடுத்தாளுகிறார் (Sirpi Balasubramaniam, 2014).

## அரசியல் நிலை

அரசியல் காரணமாக சமுதாயம் சீரழிந்து வருவதையும் அரசியல் என்பது ஒரு பரமபத ஆட்டம் என்பதைச் சுட்டும் கவிஞர் படங்களை விரித்து உடல்களை நெளித்து வழிவிடாமல் காத்துக்கொண்டிருக்கும் நச்சுப்பாம்புகளாய் பல அரசியல்வாதிகள சமுதாயத்தை முன்னேற விடாது அடிமைப்படுத்தி வருகிறார்கள் என்பதை தன் கவிதை வரிகளில் சுட்டிக்காட்டுகிறார்.

“தாயங்கள் போட்டு

நாங்கள் தொடங்கும்

ஒவ்வொரு பயணத்தையும்

தடுத்துக் கடிக்க

அடுத்துக் கெடுக்க

இத்தனை நாகங்களா?”

தாயங்கள் போட்டுத் தொடங்கும் ஒவ்வொரு முன்னேற்றப் பயணத்தையும் தடுத்துக் கெடுக்கிறது. இந்த நாகங்கள் வெளித்தோற்றத்தில் மனிதனைப் போல் இருந்து கொண்டு உள்ளுக்குள் விசநாகங்களாய் எத்தனையோ அரசியல்வாதிகள் சமுதாயத்தில் இருக்கிறார்கள். மக்கள் எங்கோ சில சில ஏணிகளைப் பிடித்து முன்னேறி விட்டாலும் புறப்பட்ட திசைக்கே விரட்டி அடிக்கும் இருட்டுத்தாரைகளாக அதிகாரிகள் நம்மில் சிலர் விளங்குகிறார்கள் (Sirpi Balasubramaniam, 2014).

“வழிவிடச்சொல்லி

விரல்கள் நடுங்கத்

தாயம் உருட்டுகிறோம்

உங்கள்

வாயில் விழுந்து

வாலில் வழிந்து

நேற்றைப் புரட்டுகிறோம்”

என்ற கவிதை வரிகள் முன்னேற்றத்திற்கு வழிவிடச் சொல்லி விரல்கள் நடுங்கத் தாயம் உருட்டுவதைப்போல் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனும் பல ஏக்கங்களோடும் எதிர்பார்ப்புகளோடும், விரல்கள் நடுங்க ஓட்டுப்போடுகிறான். ஆனால் அவன் இதுவரையிலும் எந்தப் பயனையும் அடையவில்லை (Sirpi Balasubramaniam, 2014).

## அடித்தள மக்களுக்கான உயர் சிந்தனை

சிகரங்கள் பொடியாகும் என்ற கவிதையில் கவுண்டர் இனமக்களிடம் சேரி மக்கள் எங்க அருக்காணிக்கு நேற்று நீங்க புருசனாயிட்டீங்க… அதனால் நாங்க உங்க பெண்ணைப் பெண் கேட்டு வந்திருக்கோம் என்று சொல்லி முடிக்கவில்லை சேரி மக்கள் அனைவரும் சுருண்டு விழுந்தனர். சாதி வெறியால் இன்று சமூகம் சின்னா பின்னமாய் சீர்குழைந்து போகிறது. இந்த நிலை மாற

வேண்டுமானால் கீழ்வர்க்கத்தினர் குட்டக் குட்டக் குனியாமல் ஒன்றுபட்டு எதிர்த்துப் போராடி மேல்வர்க்கத்தினரின் அதிகாரம் ஆணவத்தைக் குறைக்க வேண்டும் என்ற கவிஞரின் கருத்து அடித்தள மக்களின் உணர்ச்சியைத்தூண்டும் வகையில் வெளிப்படுகிறது.

"பாளைக் கத்தியாய்ப் பாய்ந்தது

ஒரு சொல்

இல்லீங்க - எங்க அருக்காணிக்கு நேத்து

நீங்கதான் புருசனாய்ட்டீங்க...

நாம தான் உறவாயிட்டோம்

அதனாலே ஒங்க மக காமாட்சியை

எங்க சின்னானுக்குப் பெர்ண்ணு கேக்க"

என்ற கவிதை வரிகள் சாதிப் பாகுபாட்டால் சமுதாயத்தில் கீழ்மக்கள் படும் அவலத்தை வெளிக்காட்டும் கவிஞரின் உள்ளக் குமுறல் பொதுவுடைமை கொள்கை எனும் தீர்வை வெளிப்படுத்துகிறது (Sirpi Balasubramaniam, 2014).

## முடிவுரை

சமுதாயத்தில் நசுக்கப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் அடித்தள மக்கள் மற்றும் தொழிலாளர்களின் புரட்சிக்காக மட்டும் இந்த இலக்கியம் படைக்கவில்லை இன்றைய பெண்களின் புரட்சிகரமான சிந்தனையை வெளிக்காட்டும் நோக்கத்திலும் இக்கவிதை படைக்கப்படுகிறது. தனிமனிதன் கீழ்மைப்படுத்தக் கூடாது என்றும், எல்லோரும் ஓர்குலம் என்ற சமத்துவக்கோட்பாட்டுடனும், சமுதாய அழிவை எண்ணி அஞ்சாது துணிவோடு எதிர் கொள்ளும் பண்பை வளர்த்தலும், போலிகளைக் கண்டு ஏமாறாது நில், நிதானி, செல் என்று சமுதாயத்தை நெறிப்படுத்துவதும், சாதியால கீழ்மைப்பட்டு முறை கேடுகளால் சின்னா பின்னமாய் அழிந்து கொண்டிருக்கும் மக்களைத் தட்டி எழுப்பி புது சிந்தனையை ஏற்படுத்துவதும், பெண்களுக்கு நிகழும் அநிதியைக் கண்டு பொங்கி எழுந்து குரல் கொடுப்பது சிற்பியின் கவிதைகளில் காண விரும்பும் சமுதாய மாற்றம் உருவாக தனது சிந்தனையைப் பதிவு செய்துள்ளார்.

## References

Mohan, R., (2012) Sirpin Katturaikal, Manivasagar Pathippagam, Chennai, India.

Pillai, K.K., (2013) Tamilaga varalarum panpadum, International Institute of Tamil Studies, Chennai, India.

Sirpi Balasubramaniam, (2014) Sirpin Kavithai Vanam, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License